1968 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிராமங்களில் உணவுப் பங்கீடு கொடுப்பதில்லை என்று சொல்வது சரியானது அல்ல. எங்கு ரொம்ப நெருக்கடி இருக்கிறதோ, அங்கே பங்கீடு செய்யப் பட்டுக் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் அறுவடை நடக்கிறது என்கிற காரணத்தால், தேவையில்லை என்று நிறுத்தியிருக்கலாம்.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே நகராட்சி மன்ற எல்லையில், வீடு கிடைக்காத காரணத்தால், அருகாமையில் உள்ள கிராமத்தில் நகராட்சியில் வேலை செய்பவர்கள் இருக்கிருர்கள். ஆனுல், நகரத்தில் உணவுப் பங்கீடு இருந்தாலும், கிராமத்தில் பங்கீடு கிடையாது. ஆகவே, நகராட்சி எல்லையில் இருக்கும் கிராமங்களில் இருப்ப வர்களுக்கும் ரேஷன் கிடைக்க உத்தரவு போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தமாதிரி உத்தேசம் இல்லை. கொடுக்க வேண்டிய இடங்களில் இருக்கும் நிலைமைகளை அனு சரித்துத்தான் வினியோகிக்கப்படும்.

திரு பி. துரைராஜ் : சார், நஞ்சைப் பகுதிகளில் உணவுப் பங்கீடு அவ் வளவு அவசியம் இல்லை. வரட்சியான பிரதேசங்களுக்குத்தான் வேண்டும் என்று அமைச்சர் சொன்னுர்கள். நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோவில் பகுதி மிகவும் வரண்ட பகுதி, நஞ்சை கிடையாது. அங்குள்ள எல்லா கிராமங்களுக்கும் உணவுப் பொருள் ரேஷன் போட நடவடிக்கை எடுப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய உணவு தானியங் கள் கையிருப்பைப் பொறுத்து அவசியமான இடங்களுக்குக் கொடுக்க பட்டு வருகிறது.

முன்னுள் படைவீரர்களுக்கு வீட்டுமனை

*216 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு வருவாய் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை முன்னுள் ராணுவத்தினர் சங்கத்திடம் இருந்து 1967-ம் வருடம் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி, 1967 ஜூலை மாதம் ஆகிய காலங் களில் வீடு கட்ட நிலம் கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந் துள்ளாதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோயம்புத்தூர் வட்டத்தில் உள்ள குறிச்சி கிராமத்தில் நில அளவை 603-1எ எண்ணில் முன்னுள் படை வீரர்களுக்கு வீடு கட்டுவதற்காகக் காலி மனை எதுவும் இல்லை என்று கோயம்புத்தூரில் உள்ள முன்னுள் படை வீரர் சங்கத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

Training for fishermen.

*180 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is proposed to conduct State-wide training in the Departmental Inshore Fishing Stations and Training Centres under the auspices of Thiru Greeves Cotton & Co., and

(*b*) if so, the details thereof ?